

### ஸ்ரீ காஞ்சி ஸ்ரீஸ்ரீ பரமாச்சார்ய மஹா ஸ்வாமிகள்

ஒரு பெரியவர் ஒரு பெரிய ஆச்சரியத்தைச் சொல்லுகிறார். 'நாமெல்லாம் மரணமடைவது ஆச்சரியமில்லை. இந்த உடம்பில் ஒன்பது ஓட்டைகள் இருந்தபோதிலும் அவற்றின் வழியாக உயிரானது வெளியே போகாமல் நிற்கிறதே! அதுதான் பெரிய ஆச்சரியம்! என்று அவர் சொல்கிறார்.

> நவத்வாரே சரீரே(அ) ஸ்மின் ஆயு: ஸ்ரவதி ஸ்ந்ததம்|
> ஜீவதீத்யபுதம் தத்ர கச்சதீதி கிம் அத்புதம்||

அதைப்போலப் பலவிதமான ஸந்தேஹங்களுக்கும் வித்யாஸங்களுக்கும் இடமான இந்த மதமானது எவ்வளவோ யுகங்களாக இன்னும் உயிருடன் இருக்கிறதே என்பதை நினைத்துத்தான் ஆச்சரியப்பட வேண்டியிருக்கிறது! வேதத்தை விட்டால் சிலருக்குப் பாபம், வேதம் சொன்னால் சிலருக்குப் பாபம் என்பதைப்போல் இவ்வளவு வித்யாஸங்களும் பக்ஷபாதங்களும் ஏன் நம் மதத்தில் மட்டும் இருக்கின்றன என்று தோன்றுகிறது.



### ஸ்ரீஸ்ரீ காஞ்சி ஜயேந்திர ஸ்வாமிகள்

மந்திரங்களை நாம் விடுவதால் மந்திரத்துக்கு ஒரு கஷ்டமும் இல்லை. நஷ்டம் நமக்குத்தான் சகல துக்கங்களிலிருந்தும் விடுபட்ட ஸ்தானந்த நிலைதான் மோக்ஷம். தூங்குவதற்கு முன்னால் நம் இஷ்ட தேவதையை நினைத்து அந்த நினைப்போடயே தூக்கத்தில் ஆழ்ந்துவிட வேண்டும். மான அவமானம் பார்க்காமல் நம்மால் முடிந்த தொண்டைச் செய்ய பாடுபட வேண்டும். ஆத்மா என்ற மாறாத சத்தியத்தின் நிலையிலிருந்து பார்க்கிறபோது சரீரமும், சாவும் துச்சம்தான். இப்போது எச்சில், தீண்டல், பார்க்காததாலேயே அநேக வியாதிகள் தொத்து நோய்கள் பரவிக் கொண்டிருக்கின்றன.



### ஸ்ரீ ஸ்ரீ காஞ்சி விஜயேந்திர சரஸ்வதி ஸ்வாமிகள்

பகவந் நாமா மனசுக்கு உள்ளே ஊறி விடுகிறபோது பாபத்தை நிச்சயம் கழுவி விடும். பரோபகாரம் சித்த சுத்திக்கு உதவ வேண்டுமானால் அதற்கு உயர்நிலை, அகங்காரம் சிறிதும் இருக்கக்கூடாது. உபகாரம் செய்வதால் நமக்கு ஏற்படுகிற சித்த சுத்தியேதான் பெரிய பிரயோஜனம். நாம் பரோபகாரம் பண்ணாமலேயே ஒரு நாள் என்று எண்ண வேண்டும். பகவான் பெயரை புகழைக் கேட்பது, சிரவணம், கீர்த்தனம், பெயரை புகழைப் பாடுவது வேதத்தில் சிவன், விஷ்ணு, இரண்டையும் ஒரே போலத்தான் ஸ்தோத்திரம் செய்திருக்கிறது. ஆகையால் துவேஷம் கூடாது.



### ச்ருங்கேரி ஸ்ரீஸ்ரீ பாரதி தீர்த்த ஸ்வாமிகள்

பிறருக்கு அறிவுரை சொல்வது எளிது. ஆனால் அதை கடைப்பிடிப்பது கடினம். ஒரு ஊரில் குரு ஒருவர் இருந்தார். அவரது சீடர்கள் பத்து பேரும் அடுத்த ஊருக்குச் செல்லும்போது, வழியில் ஆறு ஒன்றைக் கடந்தனர். எல்லோரும் ஆற்றைக் கடந்து விட்டனரா என்பதை அறிய சீடன் ஒருவன் அனைவரையும் வரிசையாக நிற்க வைத்து ஒன்று, இரண்டு என எண்ணிப்பார்த்தான். ஒன்பது பேர் மட்டுமே இருக்கின்றனர். ஒருவன் ஆற்றோடு போய் விட்டானே என கதறினான். இப்படியே ஒவ்வொருவரும் எண்ணும்போது தன்னை விடுத்து மற்றவர்களை எண்ணியதால் ஒருவரை ஆற்றில் தவறவிட்டதாகவே முடிவுக்கு வந்தனர். அனைவரும் மிகுந்த வருத்தத்தோடு ஊரை நோக்கி நடந்து சென்றனர். எதிரில் வந்த பெரியவர் ஒருவர் சீடர்களின் முகவாட்டம் கண்டு அவர்களின் வருத்தத்திற்கு காரணம் கேட்டார். சீடர்கள் நடந்ததைச் சொன்னார்கள். அவர்கள் அவர்கள் அனைவரையும் வரிசையாக நிறுத்தி, பத்துபேரும் பத்திரமாக இருப்பதைத்தெளிவுபடுத்தினார். ஒவ்வொருவரும் தன்னை சேர்த்துக் கொள்ளாமல் அடுத்தவர்களை மட்டுமே எண்ணியதை உணர்ந்தனர்.



### ஸ்ரீஸ்ரீ அண்ணா ஸ்ரீ க்ருஷ்ணப்ரேமி ஸ்வாமிகள்

உலகத்தில் உள்ள எண்பத்தி நான்கு லட்சம் ஜீவ ராசிகளில் ஒன்றாய் பிறக்காமல் மனிதனாய் பிறந்து க்ருபை இல்லையா? மனிதனாக பிறந்தது நம் சாமார்த்தியமா? அதிலும், எல்லா அங்கங்களும், நிறைவான மனிதனாக பிறந்தது க்ருபை இல்லையா? வ்யாதிகளில் இருந்து நம்மை விலக்கி நாமே நமது உணவை அருவெறுக்காமல் உண்ணப் பண்ணியது க்ருபை இல்லையா? இதிலும் ஸ்வாதீனமான புத்தியுடன் புத்திக் கலக்கம் – மாறாட்டம் இன்றி நம்மை இருக்க வைத்தது க்ருபை இல்லையா? கௌரவமான குடும்பத்தில் நம்மை பிறப்பித்து கௌரவமான ஒரு வாழ்க்கையையும் நமக்கு அமைத்துக் கொடுத்திருக்கிறானே, இது க்ருபை இல்லையா? ஸத்ஸங்கத்திலும் அதிலும் உண்மையான ஸத்ஸங்கம் அமைத்து கொடுத்திருப்பதுதான் க்ருபையின் எல்லை நிலம், இதற்கு நாம் பகவானுக்கு என்ன கைம்மாறு செய்யப் போகிறோம் என்று நினைப்பதுதான் சரணாகதியின் உச்சக்கட்டம்.

ஸ்ரீ ராமஜெயம்

**விளம்பி வருஷ (2018 - 2019)**

**விசேஷ தினங்களும், தேவ, பித்ரு, பூஜா ஸங்கல்பங்களும்** அடங்கிய

# பஞ்சாங்கம்

# நித்யகாம்ய மஹாயக்ஞஸமிதி

**(REGD.)**


பிளாட் # 22, ஆழ்வார்திருநகர் அனெக்ஸ் 2வது மெயின் ரோடு,
ஆழ்வார்திருநகர், சென்னை – 600 087.
E-mail : manisastrigal@gmail.com, ksmani1967@gmail.com
Website : **www.nkmysamithi.org**





தொகுப்பாளர்

**K.S. மணி சாஸ்திரிகள்** (சென்னை)

மொபைல் : 91 – 94440 26438, 98410 26438, 86102 90266

## ரிக் வேத பாடசாலை

135, கீழ கிராமம், கடையநல்லூர், நெல்லை மாவட்டம்



## ஸ்ரீ க்ருஷ்ணப்ரேமி ஸ்வாமிகள் வேதபரிபாலன டிரஸ்ட் வேத பாடசாலை

ஆழ்வார் திருநகர், சென்னை–600 087.



கடையநல்லூர் ரிக்வேத பாடசாலைக்கு வித்தியார்த்திகள் தேவை.
சேர்க்க விருப்பம் உள்ளவர்கள் தொடர்பு கொள்ளவும்.

# JAI JAGADAMBA



### அகில லோக ஸ்ரீ தச மஹா வித்யா பீடம் டிரஸ்ட்

நெ.8/15, தாரகேஸ்வரி நகர், 1 வது தெரு,
செம்பாக்கம், கிழக்கு தாம்பரம், சென்னை 600 073, இந்தியா. Tel. 044-22780241